பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 05 ஞாயிற்றுக்கிழமை 22.10.2023 கதிர் 345

## எரிபொருளுக்கு இனிமேல் நாளாந்த விலைத் திருத்தம்
### அடுத்தாண்டு முதல் நடைமுறைக்கு

தற்போது முன்னெடுக்கப்படும் மாதாந்த விலைத் திருத்தத்திற்கு பதிலாக, அடுத்த வருடம் முதல் நாளாந்தம் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் நேற்றையதினம் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது இயங்கி வரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், எரிபொருள் விநியோக நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர். இதன்போது, சினோபக் நிறுவனம் ஏழு ரூபாய்

☞ 2

## ரணிலுக்கு 100 லட்சம் வாக்குகள் ஐ.தே.க. தவிசாளரின் கனவு இது

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் 100 லட்சம் வாக்குகளைப் பெறுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு நம்பிக்கை உள்ளது. நாம் அனைவரும் ஒன்றுபட்டு வேலை செய்தால் எமது கட்சியின் தலைவர் நூறு இலட்சம் வாக்குகளைப் பெறுவார் என்பதே அந்த நம்பிக்கையாகும்.

மக்கள் பொய்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வதில்லை. தற்போது மக்கள் முன் வருகின்ற தலைவர் சந்தைகளுக்குச் சென்று கருத்துக்களை தெரிவிக்க வேண்டியதில்லை. அவருடைய செயற்பாடுகளே மக்களின் தெரிவுக்கு

☞ 2

## இது ரகசியம் அல்ல!

தென்னிந்திய பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்வு நேற்றிரவு யாழ்ப்பாணம் முற்றவெளியில் இடம்பெற்றது. பெரும் எண்ணிக்கையான மக்கள் அதில் கலந்துகொண்டிருந்தனர். இந்த இசை நிகழ்ச்சியையொட்டியும் சில சர்ச்சைகள் கிளம்பியிருந்தன. இந்திய அமைதிப் படையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவர்கள், பணியாளர்கள். நோயாளர் கள் என்று 47 பேர் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டதன் நினைவு நாளில் இந்த இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையே சர்ச்சைக்குக் காரணம்.

இறுதிப் போரில் வைத்தியசாலை மீது விமானமற்றும் எறிகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதும் இன்று பலஸ்தீனத்தில் வைத்தியசாலை மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதும் போர்க் குற்றங்கள் என்றால், 1987இல் இந்தியப் படையினர் புரிந்ததும் போர்க்குற்றமாகக் கொள்ளப்படத்தக்கதே. அத்தகைய ஓர் உணர்வுபூர்வமான நாளில் கேளிக்கைக் கொண்டாட்ட நிகழ்வை யாழ்ப்பாண மண்ணில் நடத்தவேண்டாமே

☞ 2

## 2048 இலங்கை அபிவிருத்தி என்பது வெறும் அறிக்கையல்ல; விடாமுயற்சி

2048இல் இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடாகும் என்பது வெறும் அறிக்கையல்ல; மாறாக அது விடா முயற்சி என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

2048ஆம் ஆண்டளவில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவது என்பது வெறும் அறிக்கையல்ல மாறாக விடாமுயற்சியுடன் உருவாக்கப்பட்ட திட்டமாகும். 2048ஆம் ஆண்டளவில் இலங்கையானது ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு இணையாக இருக்கும்.

ஜனாதிபதி ரணில்

☞ 2

## பொருளாதாரத்தை பலப்படுத்திய பின்
# ஜனாதிபதித் தேர்தல் 2024இல் நடக்கும்
### மாகாண சபைத் தேர்தல் 2025தான் என்கிறார் ரணில்



நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தியதன் பின்னர் அரசமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு 2025ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது, 'ஸ்மார்ட் நாடு - 2048ஐ வெல்வோம்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில், திருத்தப்பட்ட கட்சியின் புதிய யாப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஒன்லைன் மூலம் அமைப்புக்களை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு சந்தர்ப்பம் வழங்கி கட்சியை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பில் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் நாட்டிற்கு முன், ஐக்கிய தேசியக் கட்சி ஸ்மார்ட் கட்சியாக கட்டியெழுப்பப்பட வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.

'என்னில் இருந்து ஆரம்பிப்போம்' என்ற குறியீட்டை அமைச்சர் மனுஷ நாணயக்கார ஜனாதிபதிக்கு அணிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'சிய ரத' வின் பழைய இதழ் ஒன்று அதன் உருவாக்கியான மாயா கலுபோவிலவினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

☞ 2

## ஜனநாயகக் கூட்டணி நன்றி தெரிவிப்பு



தமிழர்களின் வாழ்வுரிமை காக்க போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பாக அதன் பேச்சாளர். சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

☞ 2

## வெள்ளைக்கொடி படகுகளால் இராமேஸ்வரத்தில் பதற்றம்



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து 3 படகுகளில் வெள்ளைக் கொடிகளுடன் பலர் இராமேஸ்வரம் நோக்கிச் சென்றதனால் தனுஸ்கோடிப் பகுதயில் நேற்று இரவு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையின் மன்னாரில் இருந்து நேற்று மாலை 4 மணியளவில் புறப்பட்ட 3 படகுகள் வரிசையாக இந்தியாவை நோக்கி பயணித்துள்ளன. இதனை அவதானித்த தமிழக மீனவர்கள் உடனடியாக இராமேஸ்வரம் கரைக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இலங்கையில் இருந்து படகுகள் அணிவகுத்து வருவதான செய்தி தமிழகத்தின் பொலிசார் மற்றும் கரையோரப் பாதுகாப்பு பிரிவினர்களிற்கு உடனடியாக வழங்கப்பட்டதனால் பரபரப்படைத்த கரையோரப் பாதுகாப்புக் குழுமத்தினர் உடனடியாக தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

☞ 2

## நான் தாக்கவில்லை என்கிறார் ரோஹன



எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவை தாக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்துவெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் மின்தூக்கிக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது இராஜாங்க

## மின்சார கட்டண உயர்வை எதிர்த்து விரைவில் வழக்கு
### மின் பாவனையாளர் சங்கம் அறிவிப்பு

மின்கட்டண உயர்வு சட்ட விரோதமானது என்பதோடு அதற்கு எதிராக வழக்கு தொடரவுள்ளதாக மின்பாவனையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மின்சார சபையானது எதிர்வரும்

☞ 2

## பலஸ்தீனத்துக்கு ஆதரவாக யாழ். நகரத்தில் போராட்டம்





(ந.லோகதயாளன்)

பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடாத்திவரும் தாக்குதலைக் கண்டித்து பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக நேற்று யாழ்ப்பாணத்தில் ஓர் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காஸாவில் இஸ்ரேலியப் படைகள் மேற்கொண்டுவரும் போர் நெறிமுறைகளை மீறிய தாக்குதல்களினால் மிகப்பெரும் மனிதப்பேரழிவுக்கு ஆளாகியிருக்கும் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும் அவர்களுக்கு நீதி வேண்டியுமே இப்போராட்டம் இடம்பெற்றது.

இஸ்ரேலைக் கண்டித்து யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் அழைப்பு விடுக்கப்பட்ட

☞ 2

## டயானா மீதான தாக்குதல்; நாளை முதல் விசாரணை



இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தாக்கப்பட்டமை தொடர்பில் நாளை முதல் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார மற்றும் சுஜித் பெரேரா ஆகியோருடன் நடைபெற்ற வாய்த்தர்க்கத்தின்போது தான் தாக்கப்பட்டார் என்று இராஜாங்க அமைச்சர் டயானா கமகே

☞ 2

## பலஸ்தீன சுதந்திரத்திற்கு புளொட் அமைப்பு ஆதரவு
### இஸ்ரேலின் தாக்குதல்களுக்கும் கண்டனம்

பலஸ்தீன தேசத்தின் மீது, அங்குள்ள பொதுமக்களின் நிலைகள் மீது, இஸ்ரேல் தொடர்ச்சியாக நடாத்திவரும் கனரக படைக் கருவிகளிலான தாக்குதல்களை புளொட் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது. பலஸ்தீன தேசத்து மக்களின் சுதந்திப் போராட்டத்திற்கான தமது தொடர் ஆதரவையும் உறுதிப்படுத்துவதாக அது தெரிவித்துள்ளது.

புளொட் அமைப்பின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் இவை தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

☞ 2

## விசாரணைக்கு பொலிஸார் அனுமதியை கேட்கின்றனர்

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டமை தொடர்பில் தமக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகளை ஆரம்பிப்பது தொடர்பில் சாபாநாயகரின் அனுமதியை பொலிஸார் கோரியுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுஜித் பெரேரா, ரோஹண பண்டார ஆகியோர் தன்னைத் தாக்கினர் என்று வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

இந்தநிலையில் குறித்த முறைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்திய பொலிஸார் நாடாளுமன்றத்திற்குள் சம்பவம் நடைபெற்றுள்ளமையால்

☞ 2

## இந்தியப் படுகொலைகளின் நினைவேந்தல் யாழ். நகரில்





### வைத்தியசாலையின் உள்ளேயும் வெளியேயும் முன்னெடுப்பு

(ந.லோகதயாளன்)

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், பணியாளர்களின் 36 ஆவது நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் உள்ளேயும் வெளியேயும் நினைவு கூறப்பட்டது.

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு கோரிக்கையை நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களுக்கு விடுத்தது. ஆனால், அது செவிமடுக்கப்படவில்லை.

நிகழ்ச்சிக்கான திகதி குறித்து ஒரு மாதத்திற்கு முன்பே சந்தோஷ்நாராயணன் யாழ்ப்பாணம் வந்து அறிவித்திருந்தார். அப்போது தியாகி திலீபனின் பட்டினிப் போராட்ட நினைவு நாட்களாக இருந்த காரணத்தால், அவர் நல்லூரில் திலீபனின் நினைவிடத்திற்குச்சென்று அஞ்சலிசெலுத்தியிருந்தார். அந்தப் படங்கள் ஊடகங்களில் முக்கியத்துவம்பெற்றிருந்தன. ஒருவேளை அப்போதே திகதியை மாற்றச் சொல்லிக் கேட்டிருந்தால் அவர் அதனைச் செய்திருப்பாரோ என்னவோ. நிகழ்வுக்கான நாள்கள் நெருங்கிய நிலையில் ஏற்பாடுகள் நிறுத்தப்படவில்லை. திட்டமிட்டபடி யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலைகளின் நினைவு நாளின் இரவில் இசை நிகழ்ச்சி கோலாகலமாக இடம்பெற்றது. அனுமதி இலவசம் என்பதால் பெரும் எண்ணிக்கையான மக்கள்கூட்டமும் நிகழ்ச்சி பார்க்கத் திரண்டிருந்தது.

இது சரியா பிழையா என்கிற வாதம் ஒருபுறம் இருக்க, இந்த இசைநிகழ்ச்சியைப் பற்றியமற்றொருசர்ச்சையும்பின்னணியில் நகர்ந்துகொண்டிருக்கின்றது. இந்த நிகழ்ச்சியை இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் நடத்தியிருந்தாலும் அதன் பின்னணியில் மேற்கு நாடுகள் மற் றும் இந்தியாவில்செயற்பட்டுவரும்புலம்பெயர் நிறுவனம் ஒன்று இருப்பதாகக் கருதப்படுகின்றது. இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டுப் பணிகளை மேற்கொண்டவரில் ஒருவர், சர்ச்சைக்குரிய மனிதாக இருக்கின்றார் என்பதே இப்போதைய தகவல்.

அந்தக் குறிப்பிட்ட நபர் இலங்கையர் என்கிறபோதும் பாகிஸ்தானுக்காக இந்தியாவில் உளவு பார்த்தார் என்கிற குற்றச்சாட்டில் இந்தியாவில் கிட்டத்தட்ட 9 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார். அவரது கைது அப்போது மிக முக்கியமானதாகப் பரபரப்பானதாகப் பேசப்பட்டதாகக்கூறப்படுகின்றது. அவரைக் கண்டுபிடித்துக் கைது செய்யப்பட்ட இரு காவல்துறையினருக்கு நேரடியாக மிக உயர்பதவிவழங்கப்படுமளவிற்குமுக்கியத்துவம் மிக்கதாக அந்த விடயம் இருந்தது என்றும் குறிப்பிடுகிறார்கள்.

நேற்று இசை நிகழ்ச்சிக்கு முன்பாக இந்த விடயம் சில தரப்புக்களால் கசியவிடப்பட்டது. ஏன் என்பதற்கான காரணம் வெளிப்படையாகத் தெரியவில்லையாயினும் ஊகங்கள் இருக்கின்றன. இந்தியப் படையினரால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட தினத்தில், இந்திய இசைக் கலைஞர்களை வைத்து ஒரு பெரும் இசை நிகழ்வை நடத்தி அதன் மூலம் ஈழத் தமிழர்கள் மத்தியில் இந்தியா மீதான வெறுப்பை வளர்ப்பதற்கு பாகிஸ்தான் முயற்சிக்கிறது என்கிற செய்தியைக் கடத்துவது இதன் நோக்கங்களில் ஒன்றாக இருக்கக்கூடும் என்பது ஒரு ஊகம்.

உண்மை என்ன என்பதை சம்பந்தப்பட்டவர்கள்தான் விளக்கவேண்டும்.

**- இடிமின்னல் -**

(idiminnal23gmail.com)

## எரிபொருளுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைவாக எரிபொருளை விற்பனை செய்வது தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தமது கைகளை கட்டிப்போட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில் மேலும் உரையாற்றிய அமைச்சர் காஞ்சன தெரிவித்ததாவது:

ஆளும் தரப்பின் கொள்கைக்கு அமைவாக மாதாந்தம் ஒரு முறையே எரிபொருளில் விலைத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு நட்டம் ஏற்படாத வகையில் அடுத்தவருடம் முதல் எரிபொருள் விலைகளில் நாளாந்தம் திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இவ்வாறு திருத்தங்களை மேற்கொள்ளப்படுகின்றபோது சதங்களின் அடிப்படையில்தான் அவை மேற்கொள்ளப்படும் என்பதோடு அதன் மூலமாக இலாபம், நட்டம் ஆகியவற்றை சமாந்தமரமா கப் பேண முடியும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது. எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்ட போது நீங்களே நட்டத்தினை எதிர்கொண்டீர்கள். பின்னர் அதிகரிக்கப்பட்டபோது நீங்களே இலாபத்தையும் பெற்றீர்கள். தன்னியக்க எரிபொருள் விலை முறைமையை உருவாக்க முடியும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. அதற்கு மூன்று மில்லியன் ரூபாய் செலவாகும். அவ்வாறான நவீன முறைக்குச்செல்லவே எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## ரணிலுக்கு 100 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதுமானதாக உள்ளது.

சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. உண்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே உண்மை வெற்றி பெற்றுள்ளது. ரணில் விக்கிரமசிங்க என்ற தேசிய தலைவர் எம்முடன் உள்ளார். எமக்கு எதிர்காலம் உள்ளது. எமக்க எந்தவிதமான அச்சமும் இல்லை. என்றார்.

## 2048 இலங்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவினால் வகுக்கப்பட்ட திட்டத்திற்கமைய இலங்கை ஸ்மார்ட் நாடாக மாற்றப்படும். 2020ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பலர் வெளியேறினர். ஆனால், வேறு பலர் கட்சி யைவிட்டு வெளியேறவில்லை. அவர்கள் பெரும் தியாகங்களைச்செய்துகட்சியைமீட்டுள்ளனர்.

நிச்சயமாக இலங்கையை அபிவிருத்தியடைந்த ஒருநாடாக ஐ.தே.க மாற்றியமைக்கும். ஜனாதிபதி அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் – என்றார்.

## வெள்ளைக்கொடி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தபோதும்கரையைஎந்தப்படகுகளும் வந்தடைந்த சான்றுகள் இல்லாத காரணத்தால் படகுகள் மூலம் தேடுதல் இடம் பெற்றுள்ளது.

தேடுதலின்போது இந்தியக் கரையில் தனுஸ்கோடியைஅண்டியபகுதியில்உள்ள முதலாவது தீடையில் மூன்று படகுகளில் பலர்வந்துஇறங்கியுள்ளதனைஅவதானித்த பொலிஸார் அந்த இடத்தை உடனடியாக முற்றுகையிட்டுசோதனையில்ஈடுபட்டனர்.

3 படகுகளில்சென்ற 15 பேரும் தலைமன்னாரில்இருந்துஇராமேஸ்வரம்வரையில் நீந்திச்சென்றவர்கள் என்றும், அவர்களிற்கு உதவியாக 3 படகுகள்பயணித்தனஎன்றும் விசாரணைகளில் கண்டறியப்பட்டது. படகுகளிற்கான அனைத்து அனுமதிப்பத்திர ஆவணங்களையும் அவர்கள் வைத்திருந்தமையினால் சோதனைகளின் பின்பு அவர்கள் அனைவரும் விடுவக்கப்பட்டனர். இவ்வாறு விடுவிக்கப்பட்ட அனைவரும் இன்று அதிகாலை தலைமன்னார் திரும்புகின்றனர்.

## பொருளாதாரத்தை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் மேலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்ப சகல துறைகளிலும் ஊழலை ஒழிக்கவேண்டும். அதற்காக அரசநிறுவனங்களிலும் அரசியல் கட்சிகளிலும் ஊழலைக் கட்டுப்படுத்த பல கட்டளைச் சட்டங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

அதேநேரம் செயற்குழுவிற்குள்ள அதிகாரத்தினை நாம் நிறைவேற்றுக்குழுவிற்கு வழங்கியுள்ளோம் இதனால் தலை மையை தெரிவு செய்கின்ற பொறுப் பினை நிறைவேற்றுக்குழுவே முன்னெடுக்கவுள்ளது. அதுமட்டுமன்றி கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுப்பதும் நிறைவேற்றுக்குழுவிலேயே இடம்பெறும்.

அந்த வகையில் கட்சியின் நிறைவேற்றுக்குழு எடுக்கும் தீர்மானங்களை செயற்படுத்தவதற்கே செயற்குழு உள்ளது. அதன் அங்கத்துவ எண்ணிக்கையை நாம் குறைத்துள்ளோம். அத்துடன் கட்சியின் அரசியல் ரீதியான தீர்மானங்களை முன்னெடுப்பதற்காக நாம் புதியதொரு குழுவினை நியமித்துள்ளோம். இவைதான் கட்சியில் இடம்பெற்றுள்ள முக்கியமான மறுசீரமைப்புக்களாகும்.

இந்த மறுசீரமைப்பின் ஊடாக இலங்கையில் புதியதொரு புரட்சி ஏற்படுகின்றது. இலங்கையில்முதலாவதுடிஜிட்டல்மயமான கட்சி உருவாகின்றது. அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் காணப்படுகின்றது.

எதிர்காலத்தில் நாட்டுக்காக பரந்த பங்களிப்பை வழங்குவதற்கு ஸ்மார்ட் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி முன்வர வேண்டும். இந்த சபையில் இருப்பவர்கள் இதற்கு ஆதரவளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் யாருமில்லை என்பதும் எனக்குத் தெரியும்.

நிதி அமைச்சினை ஏற்றுக்கொள்ளுமாறு கோரியபோது அதனை மறுத்தவர்கள் பின்னர் என்ன செய்தார்கள் என்பது கேள்வியாகின்றது. ஜுலை ஒன்பதாம் திகதி உண்மையில் என்ன நடந்தது? நாடாளுமன்றத்தினை முற்றுகையிடுவதற்கு முனைந்தார்கள். பிரதமரை பதவியை விட்டு விலகுமாறு வலியுறுத்தினார்கள்.

அன்றையதினம் நான் கடுமையான அழுத்தங்களுக்கு மத்தியில் நல்லமுறையிலோ அல்லது மாற்றுவழியிலோ நாடாளுமன்றத்தினை கைப்பற்ற வருபவர்களை தடுத்துநிறுத்துமாறு உத்தரவிட்டேன். அதன் மூலமாக நாடாளுமன்றம் பாதுகாக்கப்பட்டது. அரச அதிகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. அமைச்சரவை பாதுகாக்கப்பட்டது.

அன்று கிடைத்த வாய்ப்பினை ஏற்பதற்கு துணிவற்றவர்கள் தற்போது அதிகாரங்களை கைப்பற்றுவதற்கு முனைகின்றார்கள். அன்று, ராஜபக்ஷக்களை பாதுகாப்பதற்காகவே ஜனாதிபதி பதவியை நான் பொறுப்பேற்றேன் என்று கூறினார்கள். உண்மையில் நான் எந்தவொரு கோரிக்கையை முன்வைத்தும் கோட்டாபய ராஜபக் விடத்தில் பதவியைப் பெற்றிருக்கவில்லை. அவரிடத்தில் எழுத்துமூலமான விடயங்களை நான் கையளிக்கவில்லை. அவர் பதவிவிலகுகிறார் எனவும் என்னை பதவியேற்குமாறும் கோரியபின்னரே நான் அதனைஏற்றுக்கொள்வதற்குமுன்வந்தேன். ஒருவேளை எழுத்து மூலமாக நான் கோரி பதவிகளைப் பெற்றிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று சிந்தித்துப்பாருங்கள்.

நான் ஜனாதிபதி பதவியைப் பெற்றதன் பின்னர்தான் பங்காளதேஷுக்கான கடன் மீளச் செலுத்தப்பட்டது. இந்தியாவின் கடனையும் நாம் கட்டங்கட்டமாக மீளச்செலுத்துவோம். ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள் கடனுடன் வாழுவதற்கு விருப்பமில்லாதவர்கள். ஆகவே கடனை உழைத்தேனும் மீளச் செலுத்துவார்கள்.

தற்போது இந்த நாட்டில் உள்ள அரசியல் முறைமையை மாற்றுமாறு கோருகின்றார்கள். மக்கள் அரசியல் கட்சிகளிலிருந்து அந்நியப்பட்டுள்ளார்கள். 40 முதல் 20சதவீதமானவர்கள் அரசியல் கட்சிகளைவிட்டு விலகியுள்ளார்கள். இதனால்ஜனாதிபதியை பதவி விலகுமாறு சிலர் கூறுகின்றார்கள். சிலர் ஆட்சி முறையை மாற்றுமாறு கோருகின்றார்கள்.

உண்மையில் மக்களை மீண்டும் ஒருங்கிணைப்பதற்கு நாம் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அந்த மாற்றத்தினை நான் என்னிலிருந்து ஆரம்பிக்கின்றேன். தற்போதையநிலையில்நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் குழுக்களின் தலைவர்களாக உள்ளனர் சம்பிக்க ரணவக்க, ஹர் டிசில்வா போன்றவர்கள் அவ்வாறு பதவிகளை வகிப்பவர்களில் முக்கியமானவர்கள். இவ்வாறு நாங்கள் யாரையும்பாரபட்சமாக பார்க்கவில்லை. எதிரணியில்உள்ளவர்களும்தலைமைதாங்குவது எனக்கு துணையாகவே உள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் இரண்டு சம்பவங்கள் நிறைவேறியுள்ளன. இதனால்மக்கள்நாடாளுமன்றஜனநாயகம் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். அவர்கள் நாடாளுமன்றத்தில் என்ன நடக்கின்றது என்று கோருகின்றார்கள். கருஜயசூரிய இங்கிலாந்து நாடாளுமன்ற ஒழுக்கநெறியை மையப்படுத்தியசட்டமொன்றைதயாரித்துள்ளார். அதனை நான் திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளேன்.

அதுமட்டுமன்றி ஊழல் ஒழிப்புச் சட்டத்தினை நாம் நிறைவேற்றியுள்ளோம். அதன் மூலமாக ஊழலுக்கான அனைத்து வாயில்களையும்நாம் மூடவுள்ளோம். அத்துடன், ஊழல்ஒழிப்புதொடர்பான ஆணைக்குழுவும் எதிர்வரும் திங்கட்கிழமை உருவாக்கப்படவுள்ளது. ஈகுவடோரில் போதைப்பொருள் நபர்களால் அரசியலில் ஆதிக்கம் செலுத்த முடிகின்றது. அவ்விதமாக பணம் உள்ளவர்களால் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் நடவடிக்கைகளை நாம் நிறுத்தவுள்ளோம்.

அதுமட்டுமன்றி எதிர்வரும் வரவு, செலவுத்திட்டத்தில்ஸ்மார்ட்நாட்டைஉருவாக்குவதற்கான முன்மொழிவுகள் செய்யப்படவுள்ளன. அதேபோன்று கட்சியையும் ஸ்மாட் கட்சியாக மாற்றவுள்ளோம். அதன் பொறுப்பினை இளையவர்களிடத்தில் ஒப்படைக்கவுள்ளோம். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக வேண்டும் என்றார்.

## ஜனநாயகக் கூட்டணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அனைத்து தமிழ் முஸ்லிம் கட்சிகளின் கோரிக்கைகளுக்கிணங்க பல்வேறு அச்சுறுத்தல்கள், எதிர்ப்பிரச்சாரங்கள், கிண்டல்கள், கேலிகளுக்கு மத்தியில் ஜனநாயக விழுமியங்களை மதித்து, நாம் விடுத்த அழைப்பினைஏற்றுமுழுமுடக்கஹர்த்தால் போராட்டத்தில் ஈடுபட்டு எமது உரிமைக் குரலினை அனைவரது காதுகளிலும் எட்டும்படிச் செய்த வர்த்தக சங்கத்தினருக்கும், ஊழியர் சங்கத்தினருக்கும், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் ஓட்டுனர்கள் சங்கத்தினருக்கும் தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கத்தினருக்கும் ஏனைய தொழிற்சங்கத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புலனாய்வுத்துறையினர்எமதுபோராட்டத்தை முடக்குவதற்கு மேற்கொண்ட பல முயற்சிகளும் உங்களது துணிவினால் முறியடிக்கப்பட்டுள்ளதையும்நாம்நினைவு கூர்கிறோம். தியாகங்களினூடாகவே வளர்ந்த தமிழ்த் தேசிய இனத்திற்கு உங்களின் தியாகம் மேலும் ஒரு வைரக்கல்லாக அமைந்துள்ளது. தமிழ் மக்களுக்கானநீதி என்பது முற்றாக மறுதலிக்கப்பட்டு, புத்தகோயில்கள், சிங்களக் குடியேற்றங்கள் என்று அவர்களது இருப்பே கேள்விக்குள்ளாக்கப்பட்டு, தமிழ் மக்கள் நிர்க்கதியாக நிற்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்களின்ஒட்டுமொத்தமான கவலைகளையும் கண்டனங்களையும் தெரிவிக்கும் முகமாகவும் இராஜதந்திரிகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமிழ் மக்களின் இன்றைய நிலையைவெளிப்படுத்தும்முகமாகவும்இந்த முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. ஒரு சில ஊடகங்கள் தங்களது சொந்த நிகழ்ச்சிநிரல் காரணமாக ஆரம்பத்திலிருந்தே இந்தப் போராட்டத்திற்கு எதிரான கருத்துகளை வெளியிட்டு வந்த பொழுதிலும் மக்கள் ஒருமுகமாக நின்று இதனை ஒரு வெற்றிகரமான போராட்டமாக மாற்றியுள்ளனர்.

மக்கள்மத்தியில்கடந்தபத்துநாட்களாக நாம் மேற்கொண்ட பரப்புரைகளும் தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகளுடன் நாங்கள் மேற்கொண்ட கலந்துரையாடல்களும் இந்தப் போராட்டம் வெற்றியடையக் காரணமாக அமைந்தன. பரீட்சை காரணமாக மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றார்கள் என்பதும் அரச உத்தியோகத்தர்கள்எப்பொழுதும்இத்தகைய போராட்டங்களில் கலந்துகொள்வதில்லை என்பதும் வெளிப்படையானது. ஆகவே, அவற்றைத் தவிர்த்துப் பார்க்கின்றபொழுது, இந்த கடையடைப்பு ஊடாக மக்கள் தெரிவித்த கண்டனங்கள் என்பது உரியவர்களின் காதுகளுக்கு எட்டியிருக்கும் என்று நம்புகின்றோம். போராட்டத்தில் கலந்து கொண்டு அதனை வெற்றியடையச் செய்த அனைவருக்கும் இதனை எப்படியாவது தோற்கடிக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டுதமதுகருத்துகளைஊடகங்களிலும் சமூக வலைதளங்களிலும் பதிவுசெய்த அனைவருக்கும் எமது நன்றிகள் என்றுள்ளது.

## நான் தாக்கவில்லை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் டயானா கமகே, இராஜாங்க அமைச்சர்பியல்நிசாந்தவுடன்இணைந்துதிட்டிக்கொண்டிருந்தார். நான் பொத்தான்களை அழுத்திவிட்டு காத்திருந்தபோது அவர் திட்டும் சத்தம் அதிகமானது. என்னை நோக்கி அவர் கைகளைக் காண்பித்துத் திட்டினார்.

அதன்போது அவர் என்ன கூறுகின்றார் என்று கேள்வி எழுப்பினேன். அதேசமயம் அவரது சத்தம் மேலும் அதிகமானபோது எனது தொலைபேசியை எடுத்து காட்சியை பதிவு செய்தேன். அப்போது அவர் எனது காற்சட்டையை கழற்றுவதாக கூறினார். இதுவே நான் அவருடைய சாறியைக் கழற்றுவதாக கூறியிருந்தால் தற்போது நிலைமைகள் எவ்வாறு இருந்திருக்கும் என்று சிந்தித்துப்பாருங்கள்.

அவர் முறையற்ற வகையில் கருத்துக்களை வெளியிட்டார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா தடுப்பதற்கு முனைந்தார். அவர் எம்மை கைகளால் தாக்க முனைந்தார் பின்னர் அவர் கைப்பையை வைத்து தாக்க முனைந்தார் இவற்றுக்கான காணொளிச் சாட்சியங்கள் உள்ளன என்றார்.

## டயானா மீதான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடு செய்ததை அடுத்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான குழுவினைநியமித்துள்ளார் என்று அறிவித்திருந்தார்.

இந்நிலையில் குறித்த குழு விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதோடு எதிர்வரும் 7ஆம் திகதி அறிக்கையை சபாநாயகரிடத்தில் உத்தியோக பூர்வமாக கையளிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மின்சார கட்டண .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்களில் மழைபெய்யாது என்று கூறுகின்றது. ஆனால் நீர்மின் உற்பத்தி மூலம் மணித்தியாலத்துக்கு 430 ஜிகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. தற்போதைய மழைவீழ்ச்சியுடன் பார்க்கையில் 750 ஜிகாவோட் உற்பத்திசெய்யக் கூடிய நிலைமைகளும் காணப்படுகின்றது.

நிலக்கரியின் விலை உயர்வடையும் என்று மின்சாரசபை குறிப்பிட்டுள்ளது. அது மட்டுமன்றிகடந்தகாலத்தில் 95 ரூபாவிற்கே நிலக்கரி கொள்வனவு செய்யப்பட்டதாக கூறுகின்றது. நிலக்கரியை 52 ரூபாவிற்க பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே மின்சார சபையின் கூற்றுக்கள் பொய் என்பது நிரூபனமாகியுள்ளது.

அதேநேரம், இலங்கை மின்சார சபையானது, செப்டெம்பர் மாதத்தில் இலாபமீட்டியுள்ளது. இந்த ஆண்டில் மாத்திரம் 20 பில்லியன் ரூபா இலாபமீட்டும் என்பது எமது கணிப்பாகும். இருப்பினும் அது நட்டத்தில் இயங்குவதாக குறிப்பிடுகின்றது என்றார்.

## பலஸ்தீன ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலஸ்தீன தேசத்தின் ஒரு பகுதியான, பலஸ்தீனஅதிகாரசபையின்ஆளுகைக்குட்பட்ட காஸாப் பிரதேசத்தில் இருந்து ஒக்டோபர் 7ஹமாஸ் அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலைக் காரணம் காட்டி, பலஸ்தீன மக்கள் அனைவரையும் காவு கொள்ளும்கொடூரமானதாக்குதல்களையும், வாழ்வாதாரத் தடைகளையும் செயற்படுத்த முனையும் இஸ்ரேலின் நோக்கம் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

ஹமாஸ் அமைப்பினால் பிடிக்கப்பட்ட பணயக் கைதிகள் விடுவிக்கப்படும் வரை உணவு மற்றும் மருந்து விநியோகங்களை தடைசெய்துபலஸ்தீனமக்களைஅடிபணியவைக்க எத்தணித்த இஸ்ரேல் பல்வேறு புற அழுத்தங்களினால் தற்போது நட்பு நாடான எகிப்து ஊடாக மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம் நடக்க அனுமதித்துள்ளது.

ஒரு இஸ்ரேலியர் காயப்படுத்தப்பட்டால் பதிலுக்கு பல பலஸ்தீனியர்களின் உயிர்களைக் காவுகொள்ளும் கொள்கையை நடைமுறைப்படுத்தி பலஸ்தீன மக்களுக்கு அச்சத்தையும்இஸ்ரேலிய மக்களுக்கு அதீத நம்பிக்கையையும் கொடுத்து வைத்திருந்த இஸ்ரேலின் புலனாய்வில் ஏற்பட்டுள்ள தோல்விக்கு ஒட்டுமொத்த பலஸ்தீன மக்களைப் பலிக்கடாவாக்கும் நோக்கத்தை அனுமதிக்க முடியாது.

மேற்குக் கரையில் ஆட்சியை வைத்திருக்கும் முகமட் அப்பாஸ் தலைமையிலான பலஸ்தீன அதிகார சபை 1960 களில் உலக நாடுகளால் இணக்கம் காணப்பட்டிருந்த ‘இரு நாடு’ எனும் தீர்வை ஏற்றுக் கொண்டிருந்தாலும், காஸாவின் ஆட்சியை வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பு அதனை ஏற்றுக்கொள்ளவில்லைஎன்பதைஇஸ்ரேல் நடைமுறையில் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

காஸாவில் உள்ள ஹமாஸ் அமைப்பு உறுப்பினர்களை முற்றாக அழிப்பதென்பது காஸாவில் உள்ள அனைத்து பலஸ்தீன மக்களையும் படுகொலை செய்வதன் மூலமே சாத்தியமாகும். அத்துடன் ஹமாஸ் அமைப்பினரை அழித்தொழிக்க கங்கணம் கட்டி நிற்கும் இஸ்ரேல், ஏழாம் திகதித் தாக்குதலில் சம்பந்தப்பட்டிராத மேற்குக்கரையின் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் படைப்பலத்தை பிரயோகித்து தாக்குதல்களைநடாத்திநூற்றுக்கணக்கான பலஸ்தீனர்களைக் கொன்று வருகிறது.

பலஸ்தீன தேசமானது, 2012.11.29 அன்று ஐ.நா. சபையின் 67/19 இலக்கதீர்மானத்தின் பிரகாரம் ‘பார்வையாளர் நாடு’ எனும் வகையில் 127 உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2016.03.24 அன்று, ஐ நா பாதுகாப்புச் சபையில் பதின்நான்கு நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், பலஸ்தீனப் பிராந்தியத்தில் இஸ்ரேலியக் குடியேற்றங்கள் நிறுவப்படுவது தடை செய்யப்படுகிறது. பதினைந்தாவது நாடான அமெரிக்கா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இத்தனை ஏற்பாடுகளும் உலகின் உச்ச சபையில் இருந்தும்கூட, மொசப்பத்தேமிய நாகரீகத்தின் தொட்டில் என குறிப்பிடப்படும் மேற்படி பிராந்தியத்தின் உரித்தாளர்களில் ஒரு பகுதியினரான பலஸ்தீன மக்கள் மீது 1948 ஆம் அண்டில் நேச நாடுகளால் புதிதாக, பலவந்தமாக சிருஷ்டிக்கப்பட்ட இஸ்ரேலின் ஆக்கிரமிப்பும் அடாவடித்தனங்களும் நிறுத்தப்பட முடியாமல் இருக்கின்றன.

தன்னிடம்உதவிகேட்கும்நாடுகளுக்கு மனித உரிமை நிலவரங்களை நிபந்தனையாக்கும் மேற்குலகமும், உலக நாடுகளின் பொது அமைப்பான ஐ.நா வும் இஸ்ரேலின் மனித உரிமை மீறல்களை, பொதுமக்கள் மீதான படுகொலைகளை, போர்க் குற்றங்களை கண்டு கொள்ளாமலிருப்பதுடன் அதன் செயற்பாடுகளை நியாயப்படுத்திக் கொண்டிருப்பதனை நாமும் எம் வரலாற்றுடன் ஒப்பிட்டு உணர்ந்து கொள்ளவேண்டும்.

2009 இல் வன்னியின் கிழக்கு கரையில் சிறு நிலப்பரப்பில் அடைபட்ட நிலையில் இருந்த மக்கள், புலிகளைக் காரணம் காட்டி ஆயிரக்கணக்கில் கொன்றொழிக்கப்பட அனுமதிக்கப்பட்டதைப் போலவே இன்று பலஸ்தீனத்திலும் ஹமாஸைக் காரணம் காட்டி அங்குள்ள மக்கள் கொல்லப்படுகின்றனர்.

மறைந்த பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் அவர்களின் தலைமையில் பலஸ்தீன விடுதலை இயக்கமும் அதன் அங்கத்துவப் போராளிகள் அமைப்புகளும் சுதந்திர பலஸ்தீனத்திற்காக போரிட்ட போது அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அனுபவங்களைக் கொண்டிருந்தவர்கள் நாங்கள். அன்று பலஸ்தீன மக்களின் போராட்டம் மதங்களைக் கடந்து தேசத்தின்விடுதலையையேஇலக்காகக்கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் பெரும்பாலான பலஸ்தீனர்களும் கணிசமானளவு இஸ்ரேலியர்களும்கூட இரு நாடுகள் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களாகவே இருந்தனர்.

ஆனால் இன்று, மேற்குலக நாடுகளின் ஆதிக்க உணர்வும் பொருளாதார நலன்களும்அதற்கெதிரானபிராந்தியசக்திகளின்அதிகார முனைப்புகளும் பலஸ்தீன தேசத்தை சிதைத்துகுறுக்கிவிட்டதோடு, அம்மக்களின் சுதந்திரப் போராட்டமும் அடிப்படைவாதப் போராட்டம் போல அணுகப்படுகிறது. முற்போக்கு சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கொண்டிருந்த பலஸ்தீன சக்திகள் பிராந்திய போட்டிச் சுழியில் சிக்கி கடும்போக்கு இஸ்லாமிய அமைப்புகளுடன் இணங்கி, இணைந்துசெயற்படும்நிலைக்கு சென்று விட்டன.

சமாதான வலைக்குள் பலஸ்தீன அதிகார சபையை சிக்க வைத்து இஸ்ரேலிற்குப் பலத்தையும், பலஸ்தீனத்திற்கு வெறும் பார்வையாளர்தகுதியையும்வழங்கி, எழுச்சி கண்டு வந்த ‘இன்பாடிடா’ போராட்டத்தை மழுங்கடித்த நோர்வே நாட்டு மத்தியஸ்தம் குறித்து பலஸ்தீனத் தலைவர் அரபாத் அன்று ஈழப் போராளிகளுக்கு விடுத்திருந்த எச்சரிக்கைக் குறிப்பை நாம் இன்று மட்டுமல்ல என்றும் நினைவிற் கொள்ள வேண்டும்.

பலஸ்தீன மக்களை விரட்டியும் பலஸ்தீனப்பிரதேசங்களைஊடறுத்தும்உருவாக்கப்பட்ட இஸ்ரேலியக் குடியேற்றங்கள் விலக்கப்பட்டு குறைந்த பட்சம் 1967 இல் உலக நாடுகளால் இணக்கம் காணப்பட்ட எல்லைக்கோட்டுக்கு இஸ்ரேலியப்படைகள் மீள அழைக்கப்பட்டு உருவாக்கப்படக் கூடிய ‘இரு நாடுகள்’ தீர்வே பலஸ்தீனத்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும். கூடவே இஸ்ரேலிய மக்களுக்கு பாதுகாப்பையும் நிம்மதியையும் கொடுக்கும்.

பலஸ்தீன மக்களுக்கெதிரான இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பு வடிவங்களையே இஸ்ரேலுடன் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்த அன்றைய ஜே.ஆர் அரசு தமிழர் தாயகத்தில் நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. குடியேற்றங்களை நிறுவுதல், தேசத்தை துண்டாக்குதல், பண்பாட்டினை மாற்றியமைத்தல், குடிப்பரம்பலை மாற்றியமைத்தல் என அனைத்தையும் படைபலத்தின் துணையுடன் நிறைவேற்றிக் கொண்டது. இன்று வரை அது தொடர்ந்து கொண்டே வருகிறது.

ஏறக்குறைய நூறாண்டுகளாக ஆக்கிரமிப்பாளனின், ஆயுதக் குழுக்களுக்கும் கட்டமைக்கப்பட்ட படைகளுக்கும் எதிராக விடாது போராடும் பலஸ்தீன மக்கள் தமது போராட்டத்தின் நியாயங்களை தார்ப்பரியங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கடத்தவும் தவறவில்லை. பலஸ்தீன மக்களின் போராட்டத்துடன்

(09ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனநாயகம் வேண்டும் என்று விரும்பும் சிலர் இங்கு அதனை மதிப்பதில்லை

## சுரேன் ராகவன் சாடல்



சர்வதேச மட்டத்திற்கு வெளியே ஜனநாயகம் வேண்டும் என்று விரும்பும் சிலர் இங்கு அதனை மதிப்பதில்லை என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் அல்லது இஸ்லாமிய அல்லது இஸ்ரேலிய அல்லது அமெரிக்க பயங்கரவாதம் என எதுவாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# தேங்காய் பறிக்க சென்ற குடும்பஸ்தர் உயிரிழப்பு

வீடு ஒன்றில் தேங்காய் பறிக்க சென்ற நபர் ஒருவர் தென்னை மரத்தின் நடுப்பகுதியில் சாய்ந்திருந்த மற்றுமொரு மரத்தின் கிளையில் சிக்கி உயிரிழந்துள்ளார் என ஹொரணை, வெலிகல திப்பொதுகொட பிரதேச பொரிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்றுபிள்ளைகளின்தந்தையான 39 வயதுடைய சஞ்சீவ பிரியங்கர என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வேலைக்காக தேங்காய் உடைக்கும்பணியில்ஈடுபட்டிருந்தஉயிரிழந்த நபர், வெள்ளிக்கிழமை காலை வீடொன்றில் தேங்காய் உடைக்கச் சென்ற போதே இந்தச் சம்பவத்தை எதிர்கொண்டுள்ளார்.

சம்பவத்தை கண்ட பிரதேசவாசிகள் பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்குதகவல்வழங்கியதையடுத்து, ஹொரணை திடீர் மரண விசாரணை அதிகாரி சுமேதா குணவர்தன மற்றும் பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் இணைந்து நடத்திய விசாரணையின் பின்னர், ஹொரணைதீயணைப்புதிணைக்கள அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு மரத்திலிருந்து இறந்தவரின் சடலத்தை கைப்பற்றினர்.

சடலம் சட்ட வைத்திய பணிகளுக்காக ஹொரண ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# விற்பனை நிலையத்தில் நச்சு புகை: 10 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு



தலவாக்கலை பிரதேசத்தில் நச்சு புகையை சுவாசித்ததன் காரணமாக 09 பெண்களும் ஓர் ஆணும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை பிரதேசத்தில் வசிக்கும் 20 மற்றும் 22 வயதுடையவர்களே வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

வியாழக்கிழமை மாலை தலவாக்கலை நகரிலுள்ள ஆடை மற்றும் அலங்காரப் பொருள்கள் விற்பனை நிலையமொன்றின் ஊழியர்கள் நச்சு புகையை சுவாசித்து தலவாக்கலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்எனப்பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டபோது, கடையின் ஜெனரேட்டர் இயக்கப்பட்டதால், ஜெனரேட்டரில் இருந்து வெளியேறிய நச்சு புகை கார ணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

நோய்வாய்ப்பட்டவர்கள் லிந்துலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளனர்.

சம்பவம்தொடர்பானமேலதிக விசாரணைகளைதலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அரசியல் தந்திரம் வேண்டாம் பேச்சு ஒன்று மட்டுமே போதும்

## டக்ளஸ் கருத்து



ஆயுதப்போராளியாகஒருகாலத்தில் செயற்பட்ட தான் பேச்சுகள் மூலமே தமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்பதைப் புரிந்து கொண்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டு செயற்பட்டு வருவதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சீனாவில் இடம்பெற்ற கடல்சார் ஒத்துழைப்பிற்கான கருப்பொருள் எனும் தொணிப் பொருளில் கடந்த 18 ஆம் திகதி சீனாவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பெல்ட் அன் றோட் எனப்படும் சீனாவால் உருவாக்கப்பட்டுவருகின்ற சர்வதேச தொடர்பாடல் முயற்சியின் ஒரு பகுதியாக இடம்பெற்ற குறித்த மூன்றாவது சர்வதேசக் கலந்துரையாடலில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காலாவதியான பூகோள அரசியல் தந்திரங்களைப் புறந்தள்ளி விட்டு முரண்பாடுகளற்ற பேச்சுகள் ஊடாகவே பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், உணர்வுபூர்வமான பிரச்சினைகளையும் பேச்சுகள் மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற சீன ஜனாதிபதியின் கருத்தை நிரூபிக்கும் வகையில் தன்னுடைய அரசியல் பயணம் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (05)

# புயலால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு யாழில் வலைகள் வழங்கி வைப்பு







மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தால் யாழில் நண்டு வலைகள் வழங்கப்பட்டன. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில்நடைபெற்றநிவாரணம் வழங்கும் நிகழ்வில் மெசிடோ நிறுவனத் தின் பணிப்பாளர் ஜே. ஜாட்சன் பிகிராடோ, மெசிடோ நிறுவன பணியாளர்கள், யாழ். மாவட்டசெயலகபிரதிதிட்டமிடல்பணிப்பாளர் சுப்பிரமணியம் சிவகுமாரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதில் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 52 பயனாளிகளுக்கு தலா 45 ஆயிரம் ரூபா பெறுமதியான நண்டு வலைகள் வழங்கி வைக்கப்பட்டன.(05)

# யாழ். மாவட்ட வலைப் பந்தாட்ட வெற்றியாளர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாண மாவட்டசெயலக அணி சார்பாக பங்குபற்றி வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை இடம்பெற்றது.

இலங்கை அரச சேவை வலைப்பந்தாட்ட சங்கத்தால் பதுளை மாவட்டம் பண்டாரவளையில் நடத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட சுழற்சி முறை மற்றும் விலகல் முறை போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட செயலக அணி சார்பாக பங்குபற்றி 05 போட்டிகளில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டுவீர, வீராங்கனைகளுக்கான வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மேலும்இந்நிகழ்வில்மாவட்டசெயலகபதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் , உதவி பிரதேச செயலாளர்கள் , மாவட்ட, பிரதேச செயலக பயிற்றுவிப்பாளர்கள், வெற்றீட்டிய வீர, வீராங்கனைகளும் கலந்து கொண்டனர். (05)

# போதையில் வாகனம் செலுத்திய இ.போ.சபை சாரதி கைதானார்

மன்னார் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸை மது போதையில் ஓட்டி சென்ற சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மன்னார்பஸ்நிலையத்தில்இருந்துபுதன்கிழமை மாலை தலைமன்னார் நோக்கி பயணிகளுடன் சென்றபஸ்ஸின்சாரதிகுடிபோதையில்வாகனத்தை செலுத்திய நிலையில் மன்னார் போக்குவரத்து பொலிஸாரால் புதன்கிழமை மாலை மன்னார் வைத்தியசாலை வீதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த சாரதி குடிபோதையில் வாகனத்தை செலுத்தியமை உறுதி செய்யப்பட்ட நிலையில் சாரதியை வியாழக்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த சாரதியை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தர விட்டுள்ளார். (05)

# மருந்தாளர் பற்றாக்குறையால் வைத்தியசாலைகளில் சிக்கல்

மருந்தாளர் பற்றாக்குறை காரணமாக சில வைத்தியசாலைகளில் மருந்து விநியோகம் செய்வதில் கடும் தடைகள் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது. வைத்தியசாலைகளில் இது பாரிய பிரச் சினையாக மாறியுள்ளதாக அதன் தலைவர் துார ரணதேவ குறிப் பிட்டுள்ளார். தற்போது நிலவும் பொருளாதார பிரச்சினைகளால் மருந்தாளர்கள் பலர் வெளிநாட்டு வேலைகளைத் தேடிச் செல்வதால் இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக மருந்தாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சுகாதார அமைச்சகம் நடத்திய விசாரணையில், மருந்தாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நிதி அமைச்சகத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நாகரிகத்திற்குப் பொருந்தாத செயல்

நாடாளுமன்றத்தில்தான் தாக்கப்பட்டார் என்று இராஜாங்க அமைச்சர் டயனா கமகே முறையிட்டுள்ளார். சபாநாயகரிடமும் காவல்துறையினரிடமும் முறையிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரால் தான் தாக்கப்பட்டார் என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கின்றார்.

இந்த விடயத்தில், நாடாளுமன்றக் கட்டடத்தில் ஏற்பட்ட வாக்குவாதம் முரட்டுத்தனமான செயல்கள் வரையில் சென்றிருக்கின்றன என்பதை வெளியாகியிருக்கும் காணொலிகள் வெளிப்படுத்துகின்றன.

சம்பவம் தொடர்பில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக் தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நியமித்துள்ளார். இந்த விசாரணை அறிக்கை கார்த்திகை (நவம்பர்) 7 சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹண பண்டார மற்றும் சுஜித் பெரேரா ஆகியோருடனான வாய்த்தர்க்கத்தின் போதே தான் தாக்கப்பட்டார் என்று இராஜாங்க அமைச்சர் டயானா கமகே முறைப்பாடு செய்துள்ளார். டயானா கமமே குறித்து நாடாளுமன்றத்திற்குள் பகிரப்பட்ட கருத்துக்களின் பிரதிபலிப்பாகவே இந்த வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

டயானா கமகே இலங்கை மக்களின் பொதுப் புத்திக்கு மாறான கருத்துக்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி வருபவர். அவர் நீண்ட காலம் வெளிநாடுகளில் வாழ்ந்து வந்தவர். வெளிநாட்டுக் குடியுரிமையையும் கொண்டிருக்கிறார். அதனாலேயே அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைச் சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகின்றது. அந்த வழக்குதீர்ப்புக்காகக் காத்திருக்கின்றது. அவரது வெளிநாட்டு வாழ்க்கையின் அனுபவித்தினாலோ என்னவோ டயனா சில தெரிவிக்கும் சில கருத்துக்கள் பொதுப் புத்திக்கு முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றன.

உதாரணமாக, பொருளாதாரமீட்சிக்காககஞ்சாவை இலங்கையில் உற்பத்தி செய்யவேண்டும் என்கிற யோசனையை அவர் தீவிரமாக ஆதரிக்கிறார். அத்தோடு நகரங்கள் இரவில் வெகுநேரம் செயற்படுநிலையில் இருக்கவேண்டும் அப்போதுதான் பணத்தைச் சம்பாதிக்க முடியும் என்கிறார். வெளிநாட்டுச் சுற்றுலாவிகளைக் கவரும் வகையில் மதுவின் விலைகள் குறைக்கப்படவேண்டும் என்பதும் அவரது மற்றுமொரு யோசனையாக இருக்கின்றது.

அவர் கூறும் விடயங்களோடு சம்பந்தப்பட்டவை எல்லாம் இலங்கையர்களின் பொதுப் புத்தியைப் பொறுத்தவரையில் "பாவச் செயல்கள்". அதனாலேயே அவர் மீதான விமர்சனங்கள் அதிகமாகின்றன. நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் மற்றும் முரட்டுத்தனத்தின் பின்னணியிலும் இந்த விவகாரமே இருப்பதாகத் தெரிகின்றது.

டயானா அவரது கருத்துக்களுக்காக அவ்வாறு நடத்தப்படுவது ஏற்புடையதல்ல. டயானா என்றல்ல எந்த ஒருவரும் அவரது கருத்துக்களுக்காக முரட்டுத்தனமாக நடத்தப்படமுடியாது. கருத்துக்களைத் கருத்துக்களால் எதிர்கொள்வதுதான் முறையே தவிர, முறை தவறி வார்த்தைகளைக் கொட்டுவதும் முரட்டுத்தனத்தோடு நடத்தப்படுவதும் ஏற்புடையதல்ல. அதிலும் நாடாளுமன்றம் போன்ற உயர் சபைகளில் முன்னுதாரணமாகச் செயற்படவேண்டிய அதன் உறுப்பினர்களே இப்படி நடந்து கொள்வது ஒருபோதும் ஏற்புடையதல்ல. மனித நாகரிகத்திற்குப் பொருந்தாத செயல்

எல்லோருக்கும் அவரவர் கருத்துக்கள் யோசனைகள் இருக்கும். அவை ஏற்புடையதல்ல என்றால் அவற்றை மறுத்து தமது கருத்துக்களைத் தாராளமாக அவற்றை முன்வைக்கலாம். அதற்காக ஒருவரின் மதிப்பைக் கெடுக்கும் வகையில் பேசுவதும் முரட்டுத்தனமாக நடப்பதும் முற்றிலுமாகத் தவிர்க்கப்படவேண்டியவை.

இலங்கை நாடாளுமன்ற இதைவிட மோசமான முரட்டுத்தனங்களையும் வார்த்தை மோதல்களையும் இதற்கு முன்னும் கண்டிருக்கின்றது. எனினும் இது அதைவிட ஒருபடி மேலே போய் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முரட்டுத்தனமாக நடத்தப்பட்ட சம்பவத்திற்கும் வழி வகுத்திருக்கிறது. இதுபோன்றசம்பவங்கள்தொடரஅனுமதிக்கக்கூடாது. அதனால் இது தொடர்பில் வெளிப்படையான, தீவிரமான விசாரணைகள் நடத்தப்படுவதும் குற்றமிழைத்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவதும் அவசியம்.



# பழைய இரும்புக்கு விலைபோகும் இந்திய அன்பளிப்பு உழவியந்திரங்கள்

நடராசா லோகதயாளன்



இலங்கையில் இடம் பெற்ற இறுதிப் போர் காரணமாக அதிகளவில் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண விவசாயிகளின் நன்மை கருதி 2011ஆம் ஆண்டு இந்தியா வழங்கிய 500 உழவு இயந்திரங்களை இலவசமாக வழங்கியது. போரால் பாதிக்கப்பட்ட வடக்கில் விவசாயத்தை மீளவும் தொடங்குவதற்கு வசதியாக விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு இந்த உழவியந்திரங்கள் வழங்கப்பட்டன. ஆனால், இன்று அவை வெறும் இரும்புகளாகக் காட்சி அளிக்கின்றன. விவசாயத்திற்கு எந்தப் பயனுமற்ற நிலையில் வீணே கிடக்கின்றன.

வடக்கில் உள்ள 5 மாவட்டங்களிற்கும் இந்த 500 உழவு இயந்திரங்களையும் இந்தியா வழங்க முன்வந்தபோது, அவற்றை நேரடியாக விவசாயிகளிடம் அல்லது வவிசாய அமைப்புக்களிடம் வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாணாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். அரசு அதற்கு உடன்பட மறுத்தது. அந்த இயந்திரங்கள் நேரடியாகத் தமிழர்களின் கைகளில் கிடைப்பதை சகிக்க முடியாத அரசு உழவியந்திரங்களில் தமது பிடி இருக்கவேண்டும் எனக கருதி கமநல சேவை நிலையங்களிற்கு அவற்றை வழங்குமாறு இந்தியாவை நிர்ப்பந்தித்தது. கமநல சேவை நிலையங்கள் மூலம் விவசாயிகளிற்கு குறைந்த கட்டணத்தில் அந்த உழவியந்திரங்கள் வழங்கும் என்று உறுதியளிக்கப்பட்டது. அப்போதைய வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி இந்திய அதிகாரிகளுடன் இது தொடர்பில் நடத்திய பேச்சுக்கள், உறுதி மொழிகளை அடுத்து உழவியந்திரங்கள் அனைத்தும் கமநல சேவை நிலையங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.



உழவியந்திரங்களை இந்தியாவிடம் இருந்து பெற்றுத் தமதாக்கி இலங்கை அரசே ஏதோ விவசாயிகளுக்கு உதவி செய்வதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதில் காட்டப்பட்ட முனைப்பு, அந்த உழவியந்திரங்களைப் பராமரிப்பதில் காட்டப்படவில்லை. இந்த உழவியந்திரங்களைப் பராமரிப்பதற்கான தனியான ஒதுக்கீடுகள் எவையும் இலங்கை அரசால் மேற்கொள்ளப்படவுமில்லை.

இதனால் இந்த 500 உழவு இயந்திரங்களுமே விரைவிலேயே பாதிப்பதற்குத் தகுதியற்ற நிலையை அடைந்தன. இப்போதும் அவற்றில் பெரும்பாலானவை பராமரிப்பும் இன்றியே உள்ளன. மிகச் சில மட்டும் திருத்தப்பட்டுள்ளன. நாட்டில் இன்று 35 லடசம் ரூபா வரையில் உழவு இயந்திரம் விற்பனையாகும் நிலையில் இந்தியா வழங்கிய உழவியந்திரங்களின் இன்றைய மதிப்பு வெறும் 5 முதல் 10 லட்சம் ரூபாய் மட்டுமே இருக்கின்றது.

இதில் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் உள்ள 100 உழவியந்திரங்களில் 30 உழவு இயந்திரங்கள் மட்டுமே இயங்கு நிலையில் உள்ளன. மாவட்டத்தின் 10 கமநல சேவை நிலையங்களிலும் இந்த 100 உழவியந்திரங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவை விவசாயிகளின் வயல் உழவிற்கு நியாயமான கட்டணத்தில் சேவை வழங்குவதற்காகவே நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால்,அவை பழுதடையும்போது அவற்றைத் திருத்துவதற்கு எந்த முயற்சிகளும் எடுக்கப்படுவதில்லை. அதனால் சிறிய பழுது வந்ததுமே அவை அப்படியே கைவிடப்பட்டு இன்று பயன்படுத்தவேமுடியாதநிலையை அடைந்துள்ளன.

இவ்வாறு தரித்து நிற்கும் 100 உழவு இயந்திரங்களினதும் இன்றைய சந்தைப் பெறுமதி 6 கோடியே 77 லட்சம் ரூபாய் மட்டுமே என அரசதிணைக்களத்தால் 2023 ஏப்பிரல் மேற்கொள்ளப்பட்ட விலை மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்த 100 உழவு இயந்திரங்களையும் திருத்தம் செய்வதற்கு அவற்றின் பெறுமதியிலும் பார்க்கக்கூடுதலான பணம் தேவை என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றைத் திருத்த 9 கோடியே 6 லட்சம் ரூபாய் தேவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த 100 உழவியந்திரங்களில் 30 உழவு இயந்திரங்களை திருத்துவதற்கும் 70 உழவியந்திரங்களை ஏலத்தில் பழைய இரும்புக்கு விற்பனை செய்வதற்கும் மாவட்ட கமநல ஆணையாளர் அலுவலகம் விவசாய அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப.பியுள்ளது.

இந்த 70 உழவியந்திரங்களையும் ஏலத்தில் விற்பனை செய்து கிடைக்கும் நிதி அரச திறைசேரிக்கு வருமானமாகக் கிடைக்கும். அதாவது இந்தியா கொடுத்த உழவியந்திரங்களை விவசாயிகளின் முழுமையான பயன்பாட்டிற்கும் கொடுக்காமல், வீணடித்துவிட்டு இப்போது அதனை விற்று அரசு வருமானம் பார்க்கின்றது.

இது தொடர்பில் கிளிநொச்சி இரணைமடு விவசாயிகள் சம்மேளணச் செயலாளர் மு.சிவமோகன் கருத்து தெரிவிக்கையில், "இவ்வாறான நிலை ஏற்படும் எனபதனை அன்றே கணித்தே நாம் அதனை விவசாயிகளிடம் நேரடியாகத்தருமாறுகோரினோம். தற்போதுதன்னும் அவற்றை ஒவ்வொரு விவசாய அமைப்பிற்கு அல்லது சிறந்த விவசாயிகளிற்கு அல்லது வறுமைப்பட்ட விவசாயிகளிற்குஇலவசமாகவழங்கலாம். ஏனெனில் அவை விவசாயிகளிற்காக இந்திய அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்டவை. இலங்கை அரசுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டவையல்ல" என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் பொறியியலாளர்களின் வகிபாகம் இன்றியமையாதது என்கிறார் பிரதமர் தினேஸ்

இலங்கை பொறியியலாளர்கள் அமைப்பால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும் 'டெக்னோ - 2023 கண்காட்சி' பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் தொழில்நுட்ப பதில் அமைச்சர் கனக ஹேரத் ஆகியோரால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பல்துறைசார் நிபுணர்கள், வணிகங்களின் தலைவர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட சகல தரப்பினரையும் ஒரே தளத்தில் ஒன்றிணைக்கும் நோக்கில் கடந்த 1985 ஆம் ஆண்டு முதல் நாட்டில் நடைபெற்றுவரும் மிகப்பெரிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்வான 'டெக்னோ கண்காட்சி' இவ்வாண்டு 35 ஆவது தடவையாக நடைபெறுகிறது.

அதன்படி, இம்முறை 'பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான பொறியியல்' எனும் மகுடத்தில் வியாழக்கிழமை ஆரம்பமான 'டெக்னோ 2023 கண்காட்சி' ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் இரவு 9.00 மணி வரை நடைபெறவுள்ளது.

அந்த வகையில், 'டெக்னோ - 2023' கண்காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன - டிஜிற்றல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முழுமையாக கவனம் செலுத்திவரும் இவ்வேளையில் 'பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான பொறியியல்' எனும் மகுடத்தில் இக்கண்காட்சி நடைபெறுவது மிகவும் பொருத்தமானதாக காணப்படுவதாக சுட்டிக்காட்டினார்.



வணிக வாய்ப்புக்களை உருவாக்குதல், புதிய வேலை வாய்ப்புக்களை தோற்றுவித்தல் போன்றன சமகாலத்தில் மிகவும் சவாலான விடயங்களாகக் காணப்படும் நிலையில், பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தின் ஊடாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதுடன் மாத்திர மன்றி, அதன் இயலுமைகளை சகல தரப்பினருக்கும் காண்பிக்க வேண்டும் எனவும் பிரதமர் வலியுறுத்தினார்.

கடந்த வருடம் பணவீக்க உயர்வு, பொருள்களின் விலையேற்றம், அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாடு, கையிருப்பு வீழ்ச்சி உள்ளடங்கலாக இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தது. இருப்பினும், தற்போது நாம் அதிலிருந்து ஓரளவுக்கு மீட்சியடைந்திருப்பதுடன், எமது ஏனைய நட்புநாடுகள் மற்றும் பொதுக் கட்டமைப்புக்களின் உதவியுடன் நாட்டில் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களின் செயற்திறனையும், பொருளாதாரத்தையும் எம்மால் மீட்டெடுக்க முடியும் என நம்புகின்றோம். இவை அனைத்திலும் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களின் பங்களிப்பு இன்றியமையாதவையாகும் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அதேவேளை நிகழ்வில் வரவேற்புரையாற்றிய இலங்கை பொறியியலாளர்கள் அமைப்பின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் திஸாநாயக்க, நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், நாட்டை மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் நாட்டின் அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட வகையில் 'பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான பொறியியல்' எனும் மகுடத்தைத் தெரிவுசெய்ததாக குறிப்பிட்டார்.

இந்நிலையில், கண்காட்சியை பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் உள்ளடங்கலாக பெருமளவான பொதுமக்கள் வருகைதந்து பார்வையிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

## முதன் முறையாக ஆதிவாசிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை

*வரலாற்றில் முதன்முறையாக மஹியங்கனையில் வசித்துவரும் ஆதிவாசிகள் யாழ்ப்பாணத்துக்கு நேற்று (சனிக்கிழமை) விஜயம் மேற்கொண்டனர்.*

*ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிலஅத்தோ அவரின் தலைமையிலான 60 பேரைக் கொண்ட ஆதிவாசிகள் குழுவினரே நேற்றும், இன்றும் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*அந்தவகையில் யாழில் பிரசித்தி பெற்ற இடங்களை பார்வையிட்டுவிட்டு மீண்டும் தமது இருப்பிடமான மஹியங்கனைக்கு அவர்கள் செல்லவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.*

*(05)*

## மின் கட்டண உயர்வினால் உணவு விலைகள் எகிறும்?

*மின் கட்டணம் உயர்த்தப்பட்டால் உணவக உணவுப் பொருள்களின் விலையை அதிகரிக்க நேரிடும் என உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*அதன்படி, ரைஸ், கொத்து மற்றும் ஏனைய சிற்றுண்டிகளின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளன என அதன் தலைவர் ஹர்ன ருக்ஷான் தெரிவித்துள்ளார். (05)*




# சமாதானமான தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க ஐ.நா. அமைப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கோரிக்கை



பலஸ்தீனத்தில் இடம்பெறும் பேரழிவை நிறுத்தி உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு சமாதானமான தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க ஐக்கிய நாடுகள் அமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -இந்த பிரேரணை மூலம் பலஸ்தீன பகுதியில் இடம்பெற்று வரும் பேரழிவு, அதன் மூலம் எம் போன்ற நாடுகளுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் விரைவான யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானமான தீர்வு ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம். இந்த பிரேரணையிலும் அது குறிப்பிடப்பட்டுள்ளது.

நம் கண் முன்னே சர்வதேச ரீதியில் நடைபெறுகின்ற பெரும் வன்முறையை நாம் காண முடிகிறது. புதன்கிழமை ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் இடம்பெற்றுள்ள விடயத்தை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அங்கு அமெரிக்க பிரதிநிதி ஒருவர் உரையாற்றும் போது மனித உரிமை, சர்வதேச சட்டங்கள் தொடர்பில் அவர் கருத்துக்களை முன்வைத்தார்.

அதன் போது அவரது இரட்டை வேடத்தை ஏனைய சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் நிராகரித்து செயற்பட்டதையும் காணமுடிந்தது.

அதேவேளை, இஸ்ரேல் தாக்குதல்களைக் கண்டித்து சமூகவலைத்தளங்கள் வெளியிடும் பல்வேறு தகவல்களையும் காண முடிகிறது.

விமான தாக்குதல்கள் நடத்தியும் வைத்தியசாலைகள் மீது தாக்குதல்களை நடத்தியும் மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

அவை உலகிற்கு தகவல்களைப் பகிர்ந்தளிக்கின்ற மேற்கத்திய ஏகாதிபத்திய வாதிகளுக்கு தகவல்களாக தெரியவில்லை என்பதையே எம்மால் காண முடிகிறது.

இப்போது மத்திய கிழக்கு நாடுகள் குறிப்பாக பலஸ்தீன பகுதியில் நடக்கும் வன்முறைகள் போன்று எமது நாடும் ஏகாதிபத்தியவாதிகளின் காலத்தில் இவ்வாறான அனுபவங்களை அனுபவித்துள்ளது என்பதை குறிப்பிட முடியும்.

அன்று சுதந்திரத்திற்காக போராடிய நம் மூதாதையர்கள், நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தந்தவர்கள். அவர்களையும் பயங்கரவாதிகளாகவே குறிப்பிட்டு அந்த ஏகாதிபத்தியவாதிகள் படுகொலை செய்தனர். அத்தகைய ஏகாதிபத்தியவாதிகள் இன்று அதையும் விட மோசமாக தமது கொள்கைகளை வகுத்து செயற்படுகின்றனர். அந்தக் கொடூரத்தையே இன்று மத்திய கிழக்கு நாடுகளில் காண முடிகின்றது. -என்றார். (05)

# உலக வரைபடத்திலிருந்து பலஸ்தீனத்தைநீக்கவே இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு

## ராஜித தெரிவிப்பு



புட்டினுக்கு எதிராக யுத்தம் செய்ய அஞ்சிய அமெரிக்கா ஹமாஸுக்கு எதிராக யுத்தம் செய்வதற்காக இஸ்ரேலுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வருவது பலஸ்தீனத்தை முழுமையாக உலக வரைபடத்தில் இருந்து நீக்கும் நோக்கத்திலேயே ஆகும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் - இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைகள் முழு பலஸ்தீனத்தையும் உலக வரைபடத்தில் இருந்து நீக்கு-வதற்கு முயற்சிக்கின்றனர். மேற்குலக நாடுகள் ஹமாஸைத் தோற்கடிப்பது போன்ற விடயங்களையே கதைக்கின்றனர்.

ஆனால் அங்கே பலஸ்தீனர்கள் படும் துன்பங்களை வெளிப்படுத்துவதில்லை. இஸ்ரேல்+அமெரிக்க இராணுவத்தின் வெற்றிகள் தொடர்பிலேயே கதைக்கின்றனர். அன்று புட்டினுக்கு எதிராக யுத்தம் செய்ய பயந்தவர்கள் இப்போது ஹமாஸுக்கு எதிராக யுத்தம் செய்வதற்காக இஸ்ரேலுக்கு ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா வருகின்றது.

பிக்குகள் உள்ளிட்ட குழுக்கள் ஐ.நாவுக்கு சென்று இஸ்ரேலுக்காகக் கதைக்கின்றனர். இவர்கள் வெட்கப்பட வேண்டும். இவ்வாறு பிரபாகரனுக்காகவும் கதைத்து அவருக்கும் 1947இல் வழங்கியதை போன்று நாட்டில் ஒருபகுதியை வழங்கியிருந்தால் இப்படிதான் இலங்கைக்கும் நடந்திருக்கும்.

நான் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலஸ்தீனத்திற்கு சென்றிருந்தோம். அங்கே இஸ்ரேல் படையினரே இருக்கின்றனர். அங்கு கடும் நெருக்கடிக்குள்ளேயே மக்கள் இருந்தனர். அவர்களுக்கு விடுதலை வேண்டும். அவர்களுக்கு சுதந்திரத்தை வழங்க வேண்டும். - என்றார். (05)



# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும் என நினைப்பது போல் இலங்கையிலும் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சிவேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து



பலஸ்தீனத்திற்கு அனுதாபம் தெரிவித்து எப்படி அந்த நாட்டை இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டும் என்று நினைக்கின்றோமோ அதேபோன்று இலங்கையிலும் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

காஸாவில் நடக்கும் மோதல் நிலைமையால் துன்பப்படும் மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், பாதிக்கப்பட்ட இஸ்ரேலிய மக்களுக்கும் அனுதாபத்தைக் கூறிக்கொள்கின்றேன்.

பலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலின் அடாவடியாலேயே இந்த சம்பவங்கள் நடக்கின்றன. அங்கே காஸாவில் மருத்துவமனை மீது குண்டு விழுந்துள்ளது. பாடசாலைகள், மக்கள் குடியிருப்புகள் மீது குண்டுகள் விழுகின்றன. இலங்கையிலும் இதுவே நடந்தது.

எவ்வாறாயினும் யுத்தம் தீர்வாக அமையாது. அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இதற்கான தீர்வுக்கு மூலக் காரணத்தைக் கண்டறிய வேண்டும்.

இன்று ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன பல் இல்லாத பாம்புகளை போன்றே இருக்கின்றன. எந்த அதிகாரமும் கிடையாது. இலங்கை விடயத்திலும் அப்படித்தான். இலங்கையில் நடந்த யுத்தம் சாட்சிகள் இல்லாத யுத்தமாக இருந்தது. சர்வதேச சமூகம் என்று ஒன்று உள்ளது. அவர்களுக்கு நீதி, நியாயம் கிடையாது. ஐ.நாவை பொறுத்தவரை இலங்கை யுத்தத்தின் பின்னர் அவர்களின் உள்ளக அறிக்கையில் 40,000 பேர் கொல்லப்பட்டனர் எனக் குறிப்பிடப்படுகின்றது. தமிழ் தரப்பில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற கருத்து உள்ளது. ஐ.நா. இதன்மூலம் பாடம் படித்துள்ளதாக கூறப்பட்டாலும் அது நடக்கவில்லை. இல்லாவிட்டால் காஸாவில் இந்த நிலைமை இருக்காது.

எவ்வாறாயினும் நாங்கள்தான் இந்த சம்பவத்தில் இருந்து பாடம் படித்துக்கொள்ள வேண்டும். ஐ.நாவோ, சர்வதேச சமூகமோ எங்களைக் காப்பாற்றாது. நாங்களே எங்களை காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வர வேண்டும்.

பலஸ்தீனத்தில் கிழக்கு ஜெருசலத்தை அடிப் படையாகக் கொண்ட பலஸ்தீனம் நாட்டை இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டும். அதே போன்று இஸ்ரேலின் இருப்பையும் பலஸ்தீனம் அங்கீகரிக்க வேண்டும். அதுவே நியாயமான தீர்வாக அமையும். இங்கே தனிநாடு கோரிக்கை காணாமல் போய் விட்டது. ஆனால் தமிழரும், சிங்களவரும் ஒன்றாக வாழ வேண்டும் என்றால், நடந்த அநீயாயங்களை நாங்கள் புரிந்து கொண்டிருந்தால் பலஸ்தீனத்திற்கு ஒரு நியாயமும் இலங்கைக்கு இன்னுமொரு நியாயமும் இருக்க முடியாது.

ஆகவே இலங்கைக்குள் வாழும் தமிழர்களுக்கு ஒரே இலங்கைக்குள் நியாயமான சுயாட்சியை வழங்கி அங்கீகாரத்தை தந்து, பலஸ்தீனத்தை எப்படி இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டும் என்று நினைக்கின்றோமோ அதேபோன்று இஸ்ரேலை பலஸ்தீனம் அங்கீகரிக்க வேண்டும் என்று நினைக்கின்றோமோ அதேபோன்று இங்கு தமிழரும் சிங்களவரும் ஒருவரையொருவர் அங்கீகரித்துக்கொண்டு இருக்க வேண்டும். - என்றார்.

(05)

# கிளிநொச்சி இராணுவத்தின் பூங்காவில் சமூகவிரோதச் செயல்கள் அதிகரிப்பு

## நேரில் சென்று பார்வையிட்டார் அரச அதிபர்





கிளிநொச்சி நகரத்தில் அமைந்துள்ள இராணுவத்தினரின் பூங்காவில் பல்வேறு சமூக விரோதச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என பல்வேறு தரப்பினரும் வைத்த கோரிக்கை அமைவாக மாவட்ட அரச அதிபர் குறித்த இடத்தை சென்று பார்வையிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுகூட்டத்தில் கல்வி அதிகாரிகள் மற்றும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் உள்ளிட்டோரால் குறித்த பிரதேசத்தில் இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள பூங்காவில் தொடர்ச்சியாக சமூக விரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனவும் குறிப்பாக வயது குறைந்த சிறுமிகளை அழைத்து வந்து பல்வேறு குற்ற செயல்கள் இடம் பெறுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனை அடுத்து குறித்த இடத்துக்கு பொலிஸாருடன் விஜயம் செய்த மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அங்கு நிலைமைகளை பார்வையிட்டுள்ளார்.

இதேநேரம் குறித்த பூங்கா வளாகத்தினுள் ஏராளமான கட்டடங்கள் எந்தவித பயன்பாடுகளும் அற்ற நிலையில் கதவுகளற்ற நிலையிலும் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படுவதால் அங்கு பல்வேறு குற்றச்செயல்கள் இடம் பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் தென்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

(05)





# புத்தர்சிலை வைக்கப்பட்ட பெட்டியை சேதப்படுத்தியவர் கந்தளாயில் கைது

திருகோணமலை கந்தளாய் பிரதேசத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டிகளை சேதப்படுத்தியதாகக் கூறப்படும் நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தளாய் பேராறு பகுதியை சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து இரும்பு சுற்றியலையும் பொலிஸார் மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# காணி தொடர்பான மோதலில் பேருவளையில் ஒருவர் கொலை

களுத்துறையில் காணி தொடர்பாக இடம்பெற்ற மோதலில் தலையில் தடியால் பலமாக தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் பேருவளை பின்ஹேன குருகந்தை பிரதேசத்தின் கொஹிலவத்தை பகுதியை சேர்ந்த சியோனிஸ் என்ற பெயருடைய 65 வயதுடைய நபரே.

இவர் பேருவளை, பயாகலை சிங்ககமை பிரதேச பஸ் நிலையத்திற்கு அருகில் இரத்த வெள்ளத்தில் தரையில் வீழ்ந்து கிடந்த நிலையில் களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு அழைத்துசெல்லப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பேருவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)



# நடன கலைஞர் ரஜினி செல்வநாயகம் காலமானார்

இலங்கையின் மூத்த பாரம்பரிய நடன கலைஞர் ரஜினி செல்வநாயகம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அவர் இறக்கும் போது அவருக்கு 71 வயதாகும்.

ரஜினி செல்வநாயகம் கலாசூரி மற்றும் கலா கீர்த்தி ஆகிய விருதுகளை பெற்றுள்ளார்.

அவர் ஒரு புகழ்பெற்ற நடன ஆசிரியை ஆவார், அவர் இலங்கை நடனக் கலையில் தனித்துவமானவர் என்பதோடு, தனது வாழ்க்கையை நடனக் கலைக்கு அர்ப்பணித்தவர்.

ரஜினி செல்வநாயகம் 1975 ஆம் ஆண்டில், 'சாமர கலா நிகேதனயா' எனும் பெயரில் நடனப்பள்ளியை ஆரம்பித்தார். இது நடனக் கலையின் மூலம் கலாசாரம், பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்களை மேம்படுத்தும் அடிப்படையிலான சமூகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

அவரது இறுதிச் சடங்குகள் குறித்து விரைவில் அறிவிக்கப்படும். (05)

# இலங்கையின் பிரபல வர்த்தகர் லலித் கொத்தலாவல காலமானார்



இலங்கையின் பிரபல வர்த்தகர் தேசபந்து லலித் கொத்தலாவல தனது 84 ஆவது வயதில் நேற்று (சனிக்கிழமை) காலமானார்.

அவர் செலான் வங்கியின் ஸ்தாபகத் தலைவரும், செலிங்கோ கன்சோலிடேட்டட் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் ஆவார். கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இதேவேளை, லலித் கொத்தலாவல இலங்கையின் மூன்றாவது பிரதமரான சேர் ஜோன் கொத்தலாவலவின் மருமகனாவார்.

(05)

# சிலாபம் மின்சார சபை அலுவலகத்தில் திருட்டு

சிலாபம் பிரதேசத்தில் அமைந்துள்ள மின்சார சபை அலுவலகத்தில் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா மதிப்புள்ள பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

குறித்த திருடர்கள் அலுவலகத்தின் ஜன்னல் வழியாக நுழைந்து மடிக்கணினி மற்றும் 35 கையடக்க தொலைபேசிகளை எடுத்து சென்றுள்ளதுடன் திருடப்பட்ட 35 கைத்தொலைபேசிகளையும் பாவனையிலிருந்து நீக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து மின்சார சபை தலைமை பொறியாளர் சிலாபம் தலைமையக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# எஹலியகொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துப்பாக்கி சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்பு

எஹலியகொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியங்க சில்வா சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தற்கொலையா? அல்லது கொலையா? என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எஹலியகொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியங்க சில்வா வாதுவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

(05)

# மேலும் 9 தனியார் பல்கலைக்கழகங்கள்?

மேலும் 9 தனியார் பல்கலைக் கழகங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என கல்வி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இரண்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

குறித்த பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாதமென்ற பெயரில் காஸாவில் இனப் படுகொலையே இடம்பெறுகின்றது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகிறார்



இலங்கையில் இருந்து காஸாவில் போர் நிறுத்தத்தை கோருவது ஆச்சரியமாக இருக்கின்றது பயங்காரதவாதம் என்ற பெயரில் இனப் படுகொலைகளே அங்கு நடக்கின்றன என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தொடர்பான சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில் -

நாங்கள் யூதர்களுக்கு அவர்களின் நாட்டை கொடுக்க வேண்டும். அவர்கள் சமாதானமாக வாழ வேண்டும். அதேபோன்று பலஸ்தீனத்திற்கும் அநீதி ஏற்பட்டுள்ளது. அங்கே விட்டுக்கொடுப்பு ஏற்பட்டிருந்தது.

இந்த விட்டுக்கொடுப்பில் பலஸ்தீன மக்கள் அதிகமாக அதனை செய்ததை மறுக்க முடியாது. யூதர்களின் நாடு அந்த உடன்படிக்கைகளுக்கு இணங்கி நடந்திருக்க வேண்டும். அவர்களுக்கு சொந்தமான நாடு கிடைக்கும் போது, அந்த நாட்டை சரியான முறையில் நடத்தக் கூடிய முறையிலேயே அது அமைய வேண்டும்.

நாங்கள் பிழையை பிழையென்று நேர்மையாக கூற வேண்டும். அதற்கும் மேலாக சென்றுவிட்டது. பயங்கரவாதம் என்ற பெயரில் இனப்படுகொலைகளே நடக்கின்றன. மக்களின் உணவு, மருத்துவம், நீர் வசதிகள் மறுக்கப்படுவதன் நோக்கம் என்ன?

அந்த மக்கள் தொகையை அழிக்கும் செயற்பாடே நடக்கின்றன. அங்குள்ள மக்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர். மக்களை குறிப்பிட்ட இடத்திற்கு புகலிடம் தேடி செல்லுமாறு கூறும் போது அவர்கள் அவ்வாறு செல்லும் போது அவர்கள் நோக்கி தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

எவ்வாறாயினும் பிரச்சினைகளுக்கான அடிப்படைக்காரணங்கள் உள்ளன. அவற்றைக் கண்டறிய வேண்டும். எதிர்கால பலஸ்தீன நாட்டை அழிப்பதாகவே அமையும். 15வருடங்களுக்குமுன்னர் இப்போது காஸாவில் நடப்பதை போன்று இலங்கையில் நடந்தது.

வடக்கு கிழக்கில் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப் பட்டதுடன் அவற்றின் மீது குண்டுகள் வீசப்பட்டன. வைத்தியசாலைகள் மீது குண்டுகள் வீசப்பட்டன. அதேபோன்று 15 வருடங்களின் பின்னர் இப்போது நடக்கும் போது அதன் தவறுகளை புரிகின்றனர். இப்போது போர் நிறுத்தம் தொடர்பில் கதைக்கின்றனர். இது தொடர்பில் நாம் ஆச்சரியமடைகின்றோம். தமிழ் மக்கள் எந்த தரப்பினரை சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாங்கள் இஸ்ரேல் என்ற அரசுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்கள் சமாதானமாக வாழ வேண்டும்.

அதேபோன்றே இலங்கையிலும் சிங்கள மக்களும் சமாதானமாக இருக்க வேண்டும். இதனால் இந்த நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள் மத்திய கிழக்கில் உள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து தமக்கென பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும். - என்றார். (05)

# இஸ்ரேல், பாலஸ்தீன் மோதல் இலங்கைக்கும் பொருளாதார ரீதியில் பாதிப்பு ஏற்படுத்தலாம்

## எச்சரிக்கிறார் நாமல் ராஜபக்ஷ



காஸாவில் ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கைக்கும் பொருளாதார ரீதியில் பாதிப்புகளை ஏற்படுத்தும். அதனால் இது தொடர்பில் நாடாளுமன்றமும், அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டும் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தொடர்பான சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

பலஸ்தீனத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமான தொடர்பு உள்ளது. அவர் இலங்கை - பலஸ்தீன ஒற்றுமை சங்கத்தை ஆரம்பித்தார்.

அங்கு மஹிந்த ராஜபக்ஷவின் பெயரில் வீதியொன்றும் அமைக்கப்பட்டது என்பதனை கூற வேண்டும். இந்தளவுக்கு உறவு உள்ளது.

இந்நிலையில் அங்கே மீண்டும் ஏற்படும் யுத்தத்தால் இலங்கைக்கும் பொருளாதார ரீதியில் பாதிப்புகள் ஏற்படலாம். இது தொடர்பில் நாடாளுமன்றமும், அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டும். இஸ்ரேல் - காஸா மோதல் பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றன.

இந்த யுத்தத்தால் உலகில் ஸ்தீரமற்ற நிலைமை ஏற்படும். இதனால் ஏற்படக் கூடிய பாதிப்பு நிலைமையில் இருந்து மீள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். எதிர்காலத்திலாவது உலக நாடுகள் யுத்தத்தை தவிர்த்து இந்த பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் 30வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாடு என்றவகையில், இதனால் ஏற்படுகின்ற பாதிப்பு தொடர்பில் நாங்கள் நன்கு அனுபவப்பட்டிருக்கிறோம். அதனால் இந்த மோதலை முடிவுக்கு கொண்டுவர சர்வதேச அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (05)

# பீடி கைத்தொழிலை முறையாக நடத்துவதற்கு யோசனைகள்

நாட்டில் பீடி கைத்தொழிலை முறையாக நடத்துவதற்கு புதிய கொள்கையொன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் கடந்த வாரம் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்று அதற்கான கொள்கை நடவடிக்கை நிதியமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்போது ஒரு கிலோ பீடி இலைக்கு அறவிடப்படும் 5000 ரூபா செஸ் வரியை நீக்குமாறும் கலந்துரையாடலில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பீடி இலை இறக்குமதிக்கு விதிக்கப்படும் 5000 ரூபா செஸ் வரியுடன் சேர்த்து, ஒவ்வொரு பீடியிலிருந்தும் 2 ரூபா வீதத்தை அரசாங்கம் வசூலிக்கிறது.

மது வரித் திணைக்களம் இந்த முறையை அறிமுகப்படுத்திய போதிலும் அது சரியாக செயற்படவில்லை என இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

ஒரு கிலோ பீடி இலைக்கு அறவிடப்படும் செஸ் வரி காரணமாக அதிகளவான பீடி இலைகள் நாட்டுக்குள் கடத்தப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பீடி தொழிலை சீரமைத்து, மதுவரித் திணைக்கள துறையின் செயல்பாடுகளை சீரமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (05)

# போலி விசாவில் இங்கிலாந்து செல்ல முயன்ற யாழ். இளைஞன் விமான நிலையத்தில் கைது!

போலி விசாவை பயன்படுத்தி சட்டவிரோதமாக இங்கிலாந்துக்கு செல்ல முயன்ற யாழைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலைய புறப்படும் முனையத்தில் வைத்து குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேரந்த 23 வயது இளைஞன் ஆவார்.

குறித்த இளைஞன் வெள்ளிக்கிழமை காலை கட்டார் ஏர்வேஸ் விமானத்தில் டோஹா சென்று அங்கிருந்து இங்கிலாந்துக்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர் அவர் பயண அனுமதிக்காக விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் தனது விசா மற்றும் ஏனைய ஆவணங்களை ஒப்படைத்துள்ளார்.

இதனையடுத்து அனைத்து ஆவணங்களையும் சோதனையிட்ட அதிகாரிகள், விசா போலியானது என உறுதி செய்த நிலையில், குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ்ப்பான சர்வதேச விமான நிலையத்தில் அடிப்படை வசதிகள் இல்லை என விசனம்




*யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஆரம்பித்து நான்கு வருடங்கள் கடந்துள்ள போதிலும் உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள் பெரியளவில் ஏற்படுத்தப்படவில்லை என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.*

*யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக இந்தியா மற்றும் கொழும்பு இடையேயான பயணிகள் சேவைகள் இடம்பெற்று வருவதுடன் பெருமளவானவர்கள் அதனை பயன்படுத்தி வருகின்றனர்.*

*தற்போது, விமான நிலையத்தில் விமானம் ஊடாக வருபவர்களை அழைத்து வர செல்பவர்கள் காத்திருப்பதற்கான இடம் மர நிழலேயாகும். மரங்களுக்கு கீழே கல்லாசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோடை காலத்தில் அவை பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் மாரி காலத்தில் மழை பெய்தால் கல்லாசனங்களில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.*

*குறிப்பாக பயணிகள் குடிவரவு குடியகல்வு செயற்பாடுகளை முடித்து விட்டு காத்திருப்பிற்கான போதிய இடம் இல்லாமல் அவர்களும் இதே பிரச்சினையை முகம்கொடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தற்போது மாரி காலம் ஆரம்பித்துள்ள நிலையில் விமான நிலையத்தை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் இவ்வாறான நிலையில் ஒரு சில உட்கட்டுமான அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்துவது பயணிகள் மற்றும் விமான நிலையத்திற்கு வருபவர்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்தும்.*

*குறித்த விடயம் தொடர்பில் உள்ளூர் அரசியல்வாதிகள் முதல் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம், இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை ஆகியோர் கவனத்தில் கொள்வது அவசியமாகும். (05)*

# மான் வேட்டையாடிய மூன்று பேர் கைது



(செ.தி.பெருமாள்)

ஹட்டன் கொழும்பு பழைய வீதியில் உள்ள ஸ்ரேதன்.தோட்ட பகுதியில் மான் வேட்டையாடி வாகனத்தில் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு அதிகாரி ஜயசிங்கவுக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து இந்தக் கைது இடம் பெற்றுள்ளது.

மான் வேட்டையாடியோரைத் தேடி அந்தப் பகுதியில் பொலிசார் வாகன சோதனையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அப்போது ஒரு வாகனத்தில் வேட்டையாடப்பட்ட மானைக் கண்டுபிடித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். வாகனத்தில் இருந்த மூவரும் கைது செய்யப்பட்டனர் .

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவ ரும் ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்று குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரி ஜயசிங்க தெரிவித்தார்.

## பலஸ்தீன ......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்த பரிணாமங்களைக் கொண்டிருக்கும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு இவையெல்லாம் படிப்பினைகளே.

பலஸ்தீன மக்களினது, அவர்களது தேசத்தினது சுதந்திற்கான நியாயமான தீர்வுக்காக நாம் என்றும் அவர்களுடன் உறுதியாய் நிற்போம் - என்றுள்ளது.

## விசாரணைக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை முன்னெடுப்பதற்கான அனுமதியை சபாநாயகரிடத்தில் கோரியுள்ளனர்.

இதேவேளை, தாக்குதலால் கழுத்துப் பகுதி பாதிப்புக்குள்ளாகியதாக கூறப்படுகின்ற இராஜாங்க அமைச்சர் டயானா கமகே ஸ்ரீஜெயவர்த்தன புர வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைகள் நிறைவடைந்ததன் பின்னர் அங்கிருந்து வீடு திரும்பியுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயம் சம்பந்தமாக முழுமையான விசாரணைகள் நடத்தப்பட்டு பெண் உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

அதுமட்டுமன்றி, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பெண்களை மதிக்கத் தெரியாதவர்கள் என்று குறிப்பிட்டுள்ள அவர் அவ்வாறான உறுப்பினர்களை கொண்டமைக்காக அதன் தலைவர் சஜித் பிரேமதாச வெட்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இந்தியப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி முன்னேறிய சமயம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்து வைத்தியசாலையில் கடமையாற்றிய மருத்துவர்கள், பணியாளர்கள் என 21பேரையும் நோயாளர்கள் 47 பேரையும் அநியாயமாகச் சுட்டுப் படுகொலை செய்தது. மேலும் பலர் காயமடைந்தனர்.

இந்திய இராணுவத்தின் இந்தப் படுகொலையில் சிக்கி உயிரிழந்தவர்களின் 36 வது நினைவு தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினம் நினைவு கூறப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்தோருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது.

இவ்வாறு வைத்தியசாலையின் உள்ளே வழமைபோன்று நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வைத்தியசாலையின் வெளியிலும் படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவுகூரப்பட்டனர்.





## பலஸ்தீனத்துக்கு .....





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போராட்டத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமும் கலந்துகொண்டு பாலஸ்தீன மக்களுக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியது.

# விபத்தில் இருவர் இறப்பு பொத்துவிலில் சம்பவம்



(கே எ ஹமீட்)

பொத்துவில் அக்கரைப்பற்று பிரதான வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பொத்துவிலிலிருந்து ரொட்டை வயல் பகுதிக்கு சென்ற மோட்டார் சைக்கிளும் பொத்துவில் ஹிஜ்ரா நகர் பகுதியிலிருந்து பொத்துவில் பிரதேசத்திற்கு சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து நிகழ்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பொத்துவில் 07 ஐச் சேர்ந்த ஏ.சாகுல் ஹமீது (வயது 69) என்பவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மேலதிக சிகிச்சைக்காக பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பொத்துவில் 15 ஐச் சேர்ந்த எம்.பீ.ஜாபீர் (53) என்பவரும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.







கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.10.2023இல் வெளியிடப்பெற்றது.